**முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கை சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து மன்றத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை.

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என

நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் சபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க மன்றம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) விவசாய ஆராய்ச்சி பட்டப்பின்படிப்பு மற்றும் குறுங்காலசெயலமர்வுகளுக்காக வெளிநாடு செல்கின்ற உத்தியோகத்தர்களை பங்குபற்றச் செய்வதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 49,213,526 பணத்தை செயற்பாட்டுச் செலவாகக் காட்டுவதற்குப் பதிலாக நிருவாகச் செலவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இச் செலவுகளை செயற்பாட்டுச் செலவுகளின் கீழ் வருமானக் கூற்றில் காட்டுவதற்கு இணங்கி கொள்கிறேன். | செலவுகளின் தன்மையை கருத்தில் கொண்டு சரியாக வகைப்படுத்தி கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உள்நாட்டு விவசாய ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக பணத்தை விடுவித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் நிறுவனத்தின் வழக்கமான நடவடிக்கையாக இருந்த போதிலும் அதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 12,135,933 தொகை செயற்பாட்டுச் செலவுக்குப் பதிலான மூலதனச் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் போது முன்னைய ஆண்டுகளுக்கான செம்மையாக்கல்களாக விவசாய ஆராய்ச்சி பட்டப்பின்படிப்பு மற்றும் குறுங்கால செயலமர்வுகளுக்காக வெளிநாடு செல்கின்ற உத்தியோகத்தர்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற செலவுகளை செயற்பாட்டுச் செலவுகளாக வருமான செலவுக் கூற்றில் காட்டுவதற்கு திறைசேரியிடமிருந்து விவசாய ஆராய்ச்சிக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி விடுவிக்கப்படுவது மூலதன மானியமாகும் எனவே அதனை ஆராய்ச்சிக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியாக மூலதனப் பதிவுகளில் காட்டப்பட்டுள்ளது எனினும் இச் செலவுகளில் மீண்டு வருபவைகள் 2019 ஆம் ஆண்டிலிருந்து இதன் தாக்கத்தை வருமான செலவுக் கூற்றிற்கு பெயரளவிலான கணக்குப் பதிவாக சமர்ப்பிப்பதற்கு இணங்ககிறேன். | - மேற்படி - |
| (இ) | அலுவலகக் கட்டிடங்களுக்கு திரைச்சீலைகளைப் பொருத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 438,258 செலவுகளை மூலதனமாக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான இலாபமும் நிலையான சொத்துக்களும் அத்தொகையால் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | அடுத்து வரும் ஆண்டின் போது இத்தவறை சரிசெய்வதற்குரிய இரட்டைப் பதிவுகளை கணக்கீடு செய்வதற்கு இணங்கிகொள்கிறேன். | - மேற்படி - |
| (ஈ) | திறைசேரி மானியங்களின் மூலமும் ஒப்படைப்புகளின் மூலமும் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 76,990,978 பெறுமதியான நிலையான சொத்துக்களுக்காக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 12,214,980 மொத்த தொகை காலக்கழிவு செய்யப்பட்டிருந்தும் 2018 ஆம் ஆண்டிற்காக காலக்கழிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டின் போது கொள்வனவுப் பெறுமதி தொடர்பாக இனங்காணப்பட்டவைகள் பிற்போட்ட (Deffered) நிதியத்திலிருந்து 2018 ஆம் ஆண்டிற்குரிய காலக் கழிவின் அளவு மாத்திரம் பிற்போட்ட வருமானமாக இலாபத்திற்கு செம்மையாக்கப்பட்டுள்ளது.<br><br>இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 20 அரசாங்க மாணியத்தை கணக்கீடு செய்தல் மற்றும் அரசாங்கத்தின் அனுசரணையின் கீழ் வெளிப்படுத்தலின் பிரகாரம் நிலையான சொத்துக்களுக்குரிய காலக்கழிவுகளை இனங்காண்பதற்காக உரிய நிலையான சொத்துக்களின் | நிலையான சொத்துக்களின் பெறுமதியை இனங்கண்டு சரியாக காலக்கழிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பெறுமதிக்குச் சமமான அளவிலான பிற்போட்ட வருமானம் உருவாக்கப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டிலிருந்து அவ்வாறான நிதியம் உருவாக்கி கொள்ளப்படாது நிலையான சொத்துக்களுக்குரிய பிற்போட்ட வருமானம் வருமான செலவுக் கூற்றிற்கு செம்மையாக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், முன்னைய ஆண்டுகளில் உருவாக்கி கொள்ளப்படாத பிற்போட்ட நிதியத்தை உருவாக்கி கொள்ள கூடிய அளவு தகவல்கள் மற்றும் தரவுகளை கண்டுபிடிப்பதில் சிக்கல்கள் உருவாகியுள்ளதனால் 2018 ஆம் ஆண்டிற்கான முழுமையான கொள்வனவுப் பெறுமதியான ரூபா 2,319,375 பெறுமதிக்காக மாத்திரம் பிற்போட்ட நிதியம் உருவாக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுகளுக்குரிய பெறுமானத் தேய்வுப் பெறுமதியான ரூபா 110,685 பெறுமதியான காலக்கழிவு செம்மையாக்கப்பட்டு அது பிற்போட்ட வருமானமாக 2018 ஆம் ஆண்டிற்கான இலாபத்திற்கு செம்மையாக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட கணனிகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் புத்தகங்களின் தேறிய பெறுமதியான ரூபா 116,892 மீதி 2015 ஆம் ஆண்டின் பின்னர் காலக்கழிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | முன்னாள் கணக்காளரை வேலையிலிருந்து இடை நிறுத்தி வைத்தல் இடம் பெற்ற ஆண்டிலிருந்து இந் நன்கொடைகள் காலக்கழிவு செய்யப்பட்டிருக்கவில்லை. என கடந்த நிதிக் கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்த போது வெளிப்படுத்தக்கூடியதாக இருந்த போதிலும் அவர் விலகியதன் பின்னர் உரிய காலக் கழிவுக்காக ஒரு அடிப்படையினை வெளிப்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தது. எனவே அதற்காக காலக் கழிவு செய்தல் இடம் பெற்றிருக்கவில்லை. | ஒரு அடிப்படையினை வெளிப்படுத்தியதன் பின்னர் காலக்கழிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மானியங்களை விட அதிகமான பணம் செலவுகளாக செம்மையாக்குதல் மற்றும் அம்மானியங்களுக்குரிய காலக்கழிவினை சரியாக நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக திறைசேரி மானிய நிதியக் கணக்கு | 2018 நிதி ஆண்டில் மூலதன மானியமாக பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்திற்கு மிகையாக ரூபா 612,336.53 பணம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அதனை மீண்டுவரும் செலவுகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட மானியங்களிலிருந்து உள்ளடக்கப்பட்டிருந்தது. பிற்போட்ட நிதியம் ஒன்றை | திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மானியங்களுக்குரிய காலக்கழிவினை இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 6,468,925 வரவு மீதியாக இருந்தது. அத்தவறை இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உருவாக்காது காலக்கழிவுக்காக செம்மையாக்கல் செய்தமை திறைசேரி மானியம் மறைப் பெறுமதியாக இருப்பதற்கு காரணமாக இருந்து என்பது இனங்காணப்பட்டிருந்தும் அதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு போதியளவான சான்றுகளை தேடிக் கண்டுபிடிக்க முடியாதிருந்தது. இது தொடர்பாக தொடர்ச்சியாக தேடிப்பார்க்கப்படுகின்றது என்பதனை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். |

### 1.5.2 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| சபையின் தலைவரது பதவிக்காலம் 2018 நவம்பர் 07 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும் 2018 நவம்பர் மற்றும் திசெம்பர் ஆகிய மாதங்களுக்காக ரூபா 197,600 பணம் சம்பளங்கள் மற்றும் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தது. | 2019.05.06 ஆந் திகதி அமைச்சில் இடம் பெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டவாறு இது சம்பந்தமாக மேலதிக செயலாளரால் வழங்கப்படுகின்ற அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன். | பிழையாக அங்கீகரித்த உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|---|
| 1987 இன் 47 ஆம் இலக்க இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை அதிகாரச் சட்டத்தின் 16 ஆம் பிரிவு | ஒரு நிதியத்தை தோற்றுவிக்க வேண்டும் எனவும் அந்நிதியத்திற்காக சபைக்கு கிடைக்கின்ற அனைத்து பணம் கடன் நன்கொடை மற்றும் மானியங்கள் செலவு வைக்கப்பட வேண்டும் எனவும் அந்நிதியத்திலிருந்து சபையின் செயற்பாடுகளுக்காக செய்யப்படுகின்ற அனைத்து செலவுகளுக்கும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், | முன்னாள் கணக்காளரினை வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டதன் பின்னர் உரிய நிதியத்திற்கு கணக்குப் பதிவுகள் செய்யப்படாததுடன் அதற்காக கணக்குப் பதிவுகள் வைப்பதற்கான அடிப்படையினை | அதிகாரச் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| 2015 ஆம் ஆண்டின் பின்னர் இந் நிதியம் மேற்கூறியவாறு அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை | வெளிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. எதிர்காலத்தில் உரிய நிதியம் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கு இணங்கி கொள்கிறேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 26,420,267 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 5,432,733 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 20,987,534 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு திறைசேரி மானியம் அதிகமாகக் கிடைத்தமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் என்பன.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| தேவைப்பாட்டினை இனங்கண்டு கொள்ளாது ரூபா 116,000 செலவு செய்யப்பட்டு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட 04 டயர்கள் கணக்காய்வுத் திகதியான 2019 மே 15 ஆந் திகதி வரையும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாத இந்த டயர்கள் சம்பந்தமாக கிடைத்த கொள்கைச் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் அந்த டயர்கள் கொள்வனவு செய்யப்பட்ட WPPC 3499 ஆம் இலக்க கெப் வாகனத்தின் தற்பொழுது போடப்பட்டுள்ள டயரின் பயன்பாட்டினை கருத்தில் கொண்டு அந்த டயர்களுக்குப் பதிலாக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட இந்த 4 டயர்களையும் மீளமைப்பதற்கு ஆலோசனை கிடைத்துள்ளது.<br><br>அதற்கிணங்க தற்பொழுது 38,726 கிலோ மீற்றர் தூரம் ஓடியுள்ளதனால் அண்மையில் அந்த டயர்களை மீளமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக மேலும் தெரிவித்துக் கொள்கிறேன். | தேவைப்பாட்டினை இனங்கண்டதன் பின்னர் கொள்வனவு செய்தல் இடம் பெறுதல் வேண்டும். |

### 3.2 ஏனைய அமைப்புக்களின் வளங்களைப் பயன்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
| --- | --- | --- |
| இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபையானது ரூபா 22,477,890 செலவு செய்து 2012 ஆம் ஆண்டில் நிர்மாணித்த கட்டிடங்கள் அமைந்துள்ள காணியை சட்டரீதியாக சபைக்கு பொறுப்பேற்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விவசாய நடவடிக்கை ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவித்தல் நிறுவனத்தின் (தற்போதைய HARTI நிறுவனத்தின்) முன்னாள் பணிப்பாளரான டீ.சீ.பீ.செனவிரத்ன அவர்களின் 10/1/5 ஆம் இலக்க 1990.08.01 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் 1989 இன் 54 ஆம் இலக்க காணி திட்ட வரைபடத்தின் 01 ஆம் மற்றும் 02 ஆம் இலக்க காணித்துண்டுகள் இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபையின் தலைமை அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக ஒப்படைப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எங்களின் அறிக்கையின் பிரகாரம் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய நடவடிக்கைகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்குச் சொந்தமான காணியானது காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அன்பளிப்புச் செய்த காணியாகும். | காணியை சட்டரீதியாக சபைக்கு பொறுப்பேற்பதற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
| --- | --- | --- |
| சிரேஷ்ட விஞ்ஞானி, ஆராய்ச்சி உத்தியோகத்தர், நூலகர், நிருவாக உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர் ஆகிய பதவிகளுக்கான வெற்றிடங்கள் 07மாதங்களிலிருந்து இரண்டு ஆண்டுகள் வரையான காலமாகக் காணப்பட்டிருந்தும் அவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை மன்றத்தின் பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தடையாகக் காணப்பட்டது. | வெற்றிடமாகக் காணப்பட்ட நிருவாக உத்தியோகத்தர், நூலகர், முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப மற்ற) சாரதி ஆகிய பதவிகளுக்காக உத்தியோகத்தர்களைச் சேர்த்துகொள்வதற்கு தொடர்புபட்ட தொடக்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் சிரேஷ்ட விஞ்ஞானி, நிருவாக உத்தியோகத்தர் ஆகிய பதவிகளுக்காக சேர்த்துக்கொள்வதற்கு தேவையான முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை எதிர்பார்த்து இருக்கிறோம். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் சபையின் செயலாளர் 35 வயதுக்கு மேலும் 55 வயதுக்கு குறைவாகவும் இருக்க வேண்டும். எனக் காட்டப்பட்டிருந்தும் அதற்கு முரணாக 60 வயதை மிகைத்த ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

1987 இன் 47 ஆம் இலக்க இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கை சபை அதிகாரச்சட்டத்தின் 4.1 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் II ஆம் பகுதியின் 12(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் செயலாளரை நியமிக்கும் அதிகாரம் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் பணிப்பாளர்/ செயலாளர் பதவி சபையின் நிரந்தர பதவியணியிலுள்ள ஒரு பதவியாகும்.
இக் கண்ககாய்விற்கு உட்பட்டுள்ள கலாநிதி ஜே.டீ.எச். விஜேவர்த்தன அவர்கள் விவசாய அமைச்சின் முன்னாள் பணிப்பாளர் மேலதிக செயலாளராக சேவையாற்றி ஓய்வு பெற்ற நற்பெயருள்ள அரசாங்க உத்தியோகத்தராகும்.

அதற்கிணங்க விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அதிகாரச்சட்டத்தால் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறையின் 4.1 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தகமைகள் அடைந்து கொள்ளப்படுவதனால் ஜே.டீ.எச். விஜேவர்த்தன அவர்கள் சபையின் செயலாளராக முன்னாள் விவசாய அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆட்சேர்ப்பு நடைமுறைகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.